பக்கங்கள்: நான்கு

Registered as a Newspa...

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 சித்திரை 06 வியாழக்கிழமை (18-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 142

## கடற்றொழிலாளர் இன்று வெண் ஆடைப் பேரணி!

### வடமராட்சியில் பிற்பகல் நடக்கும்

வடமராட்சி, ஏப். 18

வடபகுதி கடற்றொழிலாளர்கள் படும் துன்ப துயரங்களை சர்வ தேசத்துக்கு தெரியப்படுத்தும் விதத்திலும்—

வடபகுதி தமிழர் மீது ஸ்ரீலங்கா அரசு மீண்டும் பெரும் இரா ணு[வ] நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் அ[ழு]த்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கோரும் விதத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தையில் தாக்குதல்

சாவகச்சேரி, ஏப். 18

மட்டக்களப்பு எல்லைப் புறத்திலுள்ள வெலிகந்தை யில் ஜெயந்தியாய பகுதியி லும் சிங்கபுரக பகுதியிலும் இராணுவ நிலைகள் மீது விடு தலைப் புலிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர் என்றும் —

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் இன்னும் கிடைக் கவில்லை என்றும் 'புலிகளின் குரல்' வானொலி அறிவித் தது.

(உ-8)

## கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் இன்று ஆரம்பம்.

### 5 லட்சம் பேர் கையெழுத்திடுவர்

சாவகச்சேரி, ஏப். 18

ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகும் தமிழ் மக்களது அபிலாஷைகளை சர்வதேச அமைப்புக்களுக்கு எடுத்து இயம்பும் வகை யில் 5 லட்சம் மக்களின் கருத்துக் கணிப்பு கையொப்பம் சேகரிக்கும் போராட்டம் இன்று ஆரம்பமாகிறது.

உரிமைப் போராட்டத்துக்கு உரமும், உற்சாகமும் ஊட்டுவது,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### உணவு மற்றும் ஆயுதங்களை ஏற்றிவரும்

# கடற்படைக் கப்பல் தொடர் அணி

# வடக்கிற்கு இந்தியக் கரையூடாக!

## இந்தியக் கரையோர காவல் படையும் அதற்கு பாதுகாப்பு வழங்குகிறதாம்

சாவகச்சேரி, ஏப்ரல் 18

வடக்கில் உள்ள படையினருக்கு உணவு மற்றும் ஆயுத தள பாடங்களைக் கொண்டு வரும் கடற்படை தொடர் அணிகள் மீது தொடர்ந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி வருவதை அடு[த்]து —

கடற்படையினர் தமது தொடர் அணிப் போக்குவரத்தை இந்தியக் கரையூடாக — இந்தியக் கரையோரக் காவல் படையின் [உ]தவியுடன் — மேற்கொள்வதாகத் தெரியவந்துள்ளது.

திருகோணமலை முதல் [கா]ங்கேசன்துறை வரையான [க]டற்பகுதியில் கரை அண்டிச் [செ]ல்லாமல் — ஆழ் கடலில் [செ]ல்வதன் மூலம் — கடற் புலிகளின் அதிரடித் தாக்கு தல்களைத் தவிர்த்துக் கொள் ளலாம் என கடற்படையினர் கருதுவதாகத் தெரிகின்றது.

வடக்கில் உள்ள 45 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட படை யினருக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயர் மட்டத்தில் மாற்றங்கள் வரும்

சாவகச்சேரி, ஏப். 18

ஸ்ரீலங்கா இராணுவத் தள பதியாக றோஹான் தளு வத்த அடுத்த மாதம் பதவி ஏற்ற பின் இராணுவ உயர் மட்டத்தில் பல மாற்றங்கள் இடம்பெறும் எனத் தெரி விக்கப்படுகின்றது.

தற்போது வடக்கு— கிழக்கு நடவடிக்கை பிரதிக் தளபதி யாக உள்ள சிறிலால் வீர சூரிய நடவடிக்கைத் தளபதி யாக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின் றது. (உ-8)

## சோதனை சாவடி தகர்ப்பு

சாவகச்சேரி, ஏப். 18

கல்முனை பஸ் டிப்போ வுக்கு முன்னால் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடி கடந்த ஞாயிறு காலை 10 மணிக்கு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அச்சமயம் சோதனைச் சாவடியில் பொலீஸார் எவரும் இருக்க வில்லை என்று தெரிவிக்கப் பட்டது. (உ-3-8)

## இன்று தொடக்கம் இலவச படகுச்சேவை

சாவகச்சேரி, ஏப். 18

வன்னிக்குச் செல்லும் மக் களுக்கு உதவும் பொருட்டு இன்று தொடக்கம் ஐந்து நாள்களுக்கு இலவச படகுச் சேவையை மேற் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் துறையினர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் இத்தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசு மிகப் பெரிய இராணுவ நடவடிக் கையை புதுவருட முடிவில் ஆரம்பிக்கவிருக்கின்றது என் பது நாம் அனைவரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2 தமிழர்கள் கொலை

சாவகச்சேரி, ஏப். 18

மட்டக்களப்பு வாழைச் சேனை விநாயக புரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் இரு தமிழர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக் கப்படுகின்றது. இவர்களில் ஒருவர் இரு பிள்ளைகளின் தந்தை என தெரியவருகின் றது. (உ-8)

## கொழும்புத் துறைமுகத் தாக்குதல்: விசாரனை நடத்த விசேட குழு

சாவகச்சேரி, ஏப். 18

கொழும்புத் துறைமுகத்துக் [கு]ள் கடற் கரும்புலிகள் ஊடு [ரு]வித் தாக்குதல் நடத்திய [ச]ம்பவ[ம்] குறித்து விசாரணை [நட]த்[துவ]தற்கு படை அதி [கா]ரிகளைக் கொண்ட உயர் [மட்]ட விசாரணைக்குழு ஒன்றை ஸ்ரீலங்கா அரசு அமைத்திருக்கின்றது.

கடற்படைக் கொமா டோர் எச். ஆர். அமரவீர, பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே. திசநாயக்க, பிரிகேடி யர் ரீ. எம். பஹ்ரோன், துறைமுக அதிகார சபைத் தலைவர் சந்தரா ஜெயவர்த் தன, சபையின் முகாமைப் பணிப்பாளர் எச். டபிள்யூ விஜய குணவர்த்தன ஆகி யோரே இந்த விசாரணைக் குழுவில் இடம்பெற்றுள்ள னர்.

(உ-8)

## அன்னை பூபதியின் நினைவு தினம் நாளை

ஈழத் தமிழ் மண்ணில் இந் திய வல்லாதிக்க இராணுவம் புரிந்த அட்டூழியங்களின் கோர வடிவத்தை சர்வதேசத் துக்கும் அம்பலப்படுத்தும் வகையில் 32 நாள்கள் உண் ணாவிரதமிருந்து ஈகச் சாவை தழுவிய அன்னை பூபதியின் எட்டாம் ஆண்டு நினைவு தினம் நாளை தமிழீழம் எங் கும் உணர்வு பூர்வமாக அனுஷ் டிக்கப்படுகின்றது.

அன்னையின் நினைவு காலத்தை ஒட்டி வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளில் முக்கிய சந்திகள், கேந்திர நிலையங்கள் போன்ற இடங் களில் அன்னையின் திருவுரு வப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வரு கின்றது.

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை தமிழீழ பொது விடுமுறை தினம் என்பது குறிப்பிடத்தக் கது. (உ-13-123)

## பார்சல் குண்டு

மண்டூர் பிரதேச சபை உறுப்பினரான நாகமணி இராஜதுரை என்பவர் மண்டு ரில் தமது வீட்டில் ஒப்படைக் கப்பட்ட பொதி ஒன்றை நேற்று பிரித்த போது அது வெடித்ததில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பில் காய முற்ற இவர் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட பின்னர் உயிரிழந்தார். (உ-3-8)

## தாக்குதல் நடத்தியோரில் சிலர் தப்பிச் சென்று விட்டனராம்!

### ஐ. தே. கவின் எம். பி. தகவல்

★ கொழும், ஏப். 18

★ கொழும்புத்துறை [மு]கத்தை தாக்கியவர்களில் [சில]ர் தப்பிச் சென்று விட் டார்கள்.

★ இத்தாக்குதல் தொடர் [பா]ன முழு உண்மைகளையும் [அர]சு வெளியிட வேண்டும்.

— ஐ. தே. க. தகவல்

துறை பேச்சாளர் கருணா சேன கொடித்துவக்கு மேற் கண்டவாறு தெரிவித்திருக்கி றார்.

கொழும்புத்துறைமுகத் தாக்குதல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரி யிருக்கின்றார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

புலிகளின் இத்தாக்குதல் கொழும்பு நகரை பாதுகாப் பதில் அரசின் இயலாமையை காட்டுகிறது.

இத்தாக்குதல் எதிர்பார்க் கப்பட்ட ஒன்றே. தாக்கிய வர்களில் [சிலர்] தப்பிச்சென

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் பெண்கள் அறுவர் கைது

கொழும்பில் இறால் பண்ணை ஒன்றில் தொழில் புரிந்து விட்டு மட்டக்களப் புக்குத் திரும்பிக் கொண்டி ருந்த இருபது தமிழ்ப் பெண் களில் ஆறு பேரை மட்டக் களப்பு கோட்டை முனைப் பால சோதனைச் சாவடியில் [கடமையிலிருந்த] இராணு வத்தினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

## புலிகளின் ஷெல்லுக்கு லெப்டினன்ட் பலி!

### பேய்த்தாளையில் சம்பவம்

வாழைச்சேனை கல்குடா வீதியில் பேய்த்தாளை மினி இராணுவ முகாமின் மீது விடுதலைப் புலிகள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3மணி யளவில் மேற்கொண்ட மோட்டார் ஷெல் தாக்குத லில் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் இரு இராணுவத்தி னர் காயமடைந்தனர்.

காயமடைந்த இரு படை யினரும் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

இதையடுத்து பேய்த் தாளை கிராமத்தை நோக்கி படையினர் அரைமணி நேரம் தொடர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பசுமாடும், பசுக்கன்றும் (ஜேசி இனம்), 5 அடி உயரம் உள்ள பெரிய குத்துவிளக்கும் விற்பனைக்குண்டு. இ. தேவ் ஆனந், ''இராஜபவனம்'' கண்டுவில் லேன், சாவகச்சேரி. (41393)

## தவறிவிட்டது

அரியாலை மேற்கு, கலைமகள் வீதியைச் சேர்ந்த நாகமணி வைரமுத்து ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, 204499 இலக்க ஒய்வூதிய அட்டை, யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளை பாஸ் புத்தகம் ஆகியவை கடந்த மாதம் 15 ஆம் திகதி சாவகச்சேரியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: முகமாலை, இந்திராபுரம் இல. 44 ல் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/4198)

# போட்டிப் பரீட்சை
## பயிற்சி வகுப்பு

★ சமய பாட ஆசிரியர் தெரிவுப் பரீட்சை ★
1) நுண் அறிவு 2) பொது அறிவு
★ கிராம சேவை உத்தியோகத்தர் தெரிவுப்பரீட்சை ★
1) நுண்ணறிவு 2) மொழி அறிவு

ஆசிரியர்:
அ. குமாரவேல்

JAFFNA **NEW SCIENCE ACADEMY**
Y. M. C. A கிளிநொச்சி.
(41547)

## தொண்டர் ஆசிரியர் சங்கம்- யாழ்-மாவட்டம்
## விசேட பொதுச்சபைக் கூட்டம்

காலம்:- 22—04—1996 (திங்கள்)
நேரம்: காலை 10 மணி
இடம்:- யூப்பிற்றர் கல்வி நிலையம், சாவகச்சேரி.

★ அங்கத்துவப் பதிவு மேற்கொள்ளல்
★ சகல உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

செயலாளர்
(41546)


# மறைந்த ஓராண்டினிலே...



தரணிக்காய் வருகை: 07 - 01 - 1987
மரணத்தால் செல்கை: 18 - 04 - 1995

செல்வி
## சிந்திஜா பவானந்தராசா

நித்திரை வருவதில்லை
நிம்மதி எதுவுமில்லை
சித்திரை நிலவிற் கூட
சிறப்புற எவையுமில்லை
மெத்தவுங் கவலை தோய
மேன்மை கெட்டிருக்க வெம்மை
தத்துவப் பொருளாய் நின்று
தனித்துவ ஆடல் காட்டி
நித்திரை செய்து நீயும்
நெடியதோர் ஆண்டாயிற்றே.

ஆண்டொன்றே ஆனாலும் ஆறாதவுன் னினைவால்
காண்கின்ற கனவெல்லாம் கண்மணியே உன்வடிவாய்
மாண்பெனும் வாழ்வு விட்டு மறைந்தவுன் மலரடிக்காய்
ஆண்டவன் அடிகள் போற்றி அஞ்சலி செய்கின்றோமே.

குடும்பத்தினர்

நுணாவில் பிள்ளையார் கோவில் வீதி.
சரசாலை, சாவகச்சேரி.
18 - 04 - 1996 (41523)

# லங்கா கல்யாணி' கப்பலின் சேவை நிறுத்தப்படும்?

யாழ். மாவட்டத்துக்கு நிவாரணப் பொருள்கள் ஏற்றிவரும் பணியில் ஈடுபடும் ''லங்கா கல்யாணி'' கப்பல் அதன் சேவையை நிறுத்த முடிவுசெய்துள்ளதாக தெரிய வந்தது.

இக்கப்பலை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு குத்தகை அடிப்படையில் சேவைக்கு அமர்த்தியிருப்பதாகவும் —

அக்கப்பலுக்கான குத்தகை காலம் முடிவடைந்த காரணத்தால் கப்பலை மீண்டும் சிங்கப்பூருக்குக் கொண்டு செல்ல அதன் சிங்கப்பூர் உரிமையாளர்கள் முடிவு செய்திருந்ததாகவும்—

தற்போதைய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாகவே கப்பலை சிங்கப்பூருக்கு கொண்டு செல்ல அவர்கள் முயற்சி எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை— குத்தகைக் காலத்தை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்க புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# 'லங்கா முடித', 'மாஹோ' அடுத்த வாரத்தில் வரும்

சாவகச்சேரி, ஏப். 18

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''லங்கா முடித'' கப்பல் அடுத்த வார முற்பகுதியில் பருத்தித் துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டால் இக்கப்பல் புறப்படுவது தாமதமானதாகவும்—

நாளை இக்கப்பல் வடக்கு நோக்கிப் புறப்படும் எனவும்— யாழ். செயலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதே வேளை— கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள ''மாஹோ'' கப்பலில் மண் எண்ணெய் ஏற்றும் பணி ஆரம்பமாகியுள்ளதாகவும் —

இக்கப்பல் அடுத்த வார பிற்பகுதியில் பருத்தித் துறைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (உ-3)


## தொழிற் கல்வி

றேடியோ, ரி. வி., வி. சி. ஆர். மற்றும் சகல விதமான மின் உபகரணங்களைத் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

விவரங்கட்கு:-
**INSTITUTE OF ELECTRONICS**
நுணாவில் சந்தி அருகில். (41397)

## வலிகாம மாணவர்களுக்கான காலை, மாலை வகுப்பு

ஆண்டு **5 — 11** வரை
பிற்மன் கல்வி நிறுவன ஆசிரியர்களும், யாழ். முன்னணி ஆசிரியரும் இணைந்த சேவை
ஆசிரியர்கள் திரு. அருட்செல்வம், திரு. செல்வவடிவேல், திரு. என். பாலா, திரு. இராஜ்குமார், திரு. குழந்தைவேல், திரு. ஹரி
ஏனைய பாடங்களும்.

நெல்லியடியில்
மகா வித்தியாலய வீதியில்
**யாழ். நியூ சயன்ஸ் அக்கடமி**
(40441)


## தமிழ் இனத்தின்துன்பதுயரங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெஞ்சை உருக்கும் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி முன்வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணின் அவலங்களை, துயர நிகழ்வுகளை நீங்கள் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் எமது மண்ணின் துயரை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஐ. நா. சபைக்கும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் எங்கள் நீதியைத் தெரியப்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாகும்.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

வெரித்தாஸ்
வாசகர் வட்டம்,
இல. 542,
C/.o உதயன் பணிமனை,
சரசாலை,
சாவகச்சேரி.

வெரித்தாஸ்
வாசகர் வட்டம்
விளம்பர இல. 2,
C/o .உதயன்
கிளிநொச்சி கிளை நிலையம்,
Y. M. C. A. கட்டடம்,
கிளிநொச்சி.

(சி/4184)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக நூலகத்திலிருந்து நூல்கள், பருவ இதழ்கள், வேறு ஆவணங்களை இரவலாகப் பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், இதர ஊழியர்கள் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்பு கைதடி சித்த மருத்துவ பீடத்திலுள்ள அல்லது கிளிநொச்சி விவசாய பீடத்தில் உள்ள நூலகத்தில் அவற்றைக் கையளித்து உரிய சான்றிதழைப் பெறுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(C/4109)

# போட்டிப் பரீட்சை

திருகோணமலை, ஏப். 18

வடக்கு —கிழக்கு மாகாண சபையினால் அறிவிக்கப்பட்ட — விளையாட்டு உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான — போட்டிப் பரீட்சை — எதிர் வரும் 27 ஆம் திகதி அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் என்று மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுச்செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு 03 - 01 - 96 — 02 - 02 - 96 ஆகிய திகதிகளில் விண்ணப்பித்தோர் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம்மா துரைராஜா

29/1, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினம்மா துரைராஜா அவர்கள் 13-04-96 ஆம் திகதி காலமானார்.

அன்னார் திரு. ஞானமுத்து துரைராஜா (கட்டட ஒப்பந்தகாரர்) அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (18-04-96) பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும் திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்திற்காக மட்டுவில் லூர்து மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
மே/பா. எஸ். தங்கராசா,
திலீபன் வீதி
(பாடசாலை ஒழுங்கை),
சரசாலை தெற்கு.

தகவல்:
G. G. சந்திரசிறி
(மகன்)
விஞ்ஞானபீடம்
(2 ஆம் வருடம்)
யாழ். பல்கலைக் கழகம்.

(41549)

## சின்னையா அம்பிகைபாகன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது மீசாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டிருந்த வருமான சின்னையா அம்பிகைபாகன் (பிரபல வர்த்தகர்) 17- 4- 96 காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் பராசக்தி, அம்பிகாதேவி, சகுந்தலாதேவி (விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), மகேந்திரன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திர குமாரசாமி (முதலியார்), காலஞ்சென்ற நிர்மலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிர்மலதாஸ், மோகனா, நிர்மலகுமார், தர்ஷினி, பாமா, பூமா, மேனகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை வேம்பிராய் மயானத்தில் பி.ப 3.00 மணிக்கு நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திரு. அ. மகேந்திரன்
(மகன்)

தற்போதைய முகவரி:
திரு. இ. முருகுப்பிள்ளை
மீசாலை வடக்கு,
மீசாலை.

(41394)

நயினாதிவு
## ப. க. இராசரெத்தினம்
(இளைப்பாறிய சுங்க அதிகாரி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கந்தசாமி இராசரெத்தினம் 17 - 04 - 96 இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கந்தசாமி — நாகரெத்தினம் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ் சென்ற சின்னத்துரை — திருமதி இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாதரன் (சுவிஸ்), கெங்காதரன் (கனடா), மீனலோசினி (சுவிஸ்), யசோதரா (யாழ். இராமநாதன் நுண்கலைப் பீடம், 3 ஆம் வருடம்), குமுதினி ஆகியோரின் தந்தையாரும், தர்மகுலசிங்கத்தின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், சுமங்கலையின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, கனகசபாபதி (கனடா), குகதாசன் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), காலஞ் சென்ற காமாட்சிசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்), சவுந்தரம் (கனடா), பராசக்தி, மகாலிங்கம் (இளைப்பாறிய நிர்வாக அலுவலர்), கமலாம்பிகை (இளைப்பாறிய சங்கீத ஆசிரியை), லலிதாம்பாள் (ஆசிரியை), பரமலிங்கம் (பிரதிச் செயலாளர், உள்நாட்டு அமைச்சு, திருகோணமலை), மகாதேவா (இளைப்பாறிய தபாலதிபர்), ஞானசுந்தரம் (அதிபர்), டாக்டர் நவரத்தினராசா (தென்னாபிரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (மிராண்டாஸ், கொழும்பு), சோதீஸ்வரி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (கனடா), ஞானசுப்பிரமணியம் (ஞானம் புத்தகசாலை, கொக்குவில்) ஆகியோரின் அருமை அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் இன்று (18-04-96) வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
திருமதி நாகேஸ்வரி இராசரெத்தினம்
(மனைவி)

திரு. க. இராசசூரியர்,
யூனியன் பேக்கரி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(41395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அணிலைஏறவிட்டு அண்ணாரும்...

கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி வந்தவர்களும், இங்கிருந்து வெளி மாவட்டங்களுக்குச் சென்றவர்களும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இரு சாராரினதும் மொத்த எண்ணிக்கை எண்ணாயிரத்துக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது.

இவர்களில் எவராலும் புது வருட தினத்தன்று தமது குடும்பங்களோடு சேர்ந்து கொள்ள முடியவில்லை.

இத்தனைக்கும் இவர்கள் செய்த தவறு, விடுதலைப்புலிகள் கொழும்புத் துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்திய கடந்த வெள்ளிக்கிழமையும் அதற்கு அடுத்த நாளும் பயணம் மேற்கொண்டது தான். மேலும் இவர்கள் தமிழர்களாக இருப்பதாலும் இந்தக் கஷ்டத்தை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கையால் தாக்கப்படும் போதெல்லாம், அதனால் படையினருக்கும் அரசாங்கத்தினருக்கும் பாதிப்பும் இழப்பும் உண்டாகும் போதெல்லாம், அப்பாவித் தமிழ் மக்கள் மீது வஞ்சம் தீர்க்கப்படுவது ஒன்றும் புதிதல்ல.

கொழும்பில் விடுதலைப் புலிகள் தமது திறமையைக் காட்டத் தொடங்கிய பின்னர், படையினர் தமது பழி வாங்கல் பட்டியலில் புதிதாக பல கொடுமைகளைச் சேர்த்திருக்கிறார்கள்.

வவுனியாவில் தமிழ்ப் பயணிகளைத் தடுத்து வைத்து ...னை என்றும் விசா...ை என்றும் இம்சைப்படுத்துவதும், சித்திரவதை செய்வதும் புதிய பழிவாங்கல் வடிவங்களில் ஒன்று.

தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர், அதில் ஈடுபட ஆயத்தமாவோரைக் கண்டுபிடித்துஅதனைத் தடுப்பது தான் உண்மையான குற்றத்தடுப்பு.

ஆனால் ஸ்ரீலங்கா பொலீஸாரும், படையினரும், சம்பவம் ஒன்று நடைபெற்ற பின்னரே குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க நாயாகப் பின் அலைகிறார்கள்!

உண்மையில் இது அணிலை மரத்தில் ஏறவிட்டுவிட்டு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் நாயின் திறமையின்மை ஒத்ததே.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம். விடுதலைப் புலிகளோ ஊசிக்குள்ளாலே போய் உலக்கைக்குள்ளாலே வரக் கூடிய திறமைசாலிகள். உயிரைத் துச்சமென மதித்து தமது இலக்குகளைத் தாக்க வல்லவர்கள்.குறி வைத்தால் அது தப்பாமல் அடிப்பவர்கள். தமது தாக்குதல் இலக்கை அடைந்தே தீருவார்கள். இதனை இராணுவத் தரப்பு அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர்.

தாக்குதல்களுக்கு முன்னர் அதனைச் செயற்படுத்தும் விடுதலைப் புலிகளை மடக்கும் திறமை படையினருக்கு எள்ளளவும் இல்லை. அந்த இயலாமையை மறைப்பதற்காகவே தாக்குதல்களோடு சம்பந்தமே இல்லாத தமிழ் மக்களைத் தடுத்து வைத்தும் கைது செய்தும் சித்திரவதை புரிகிறார்கள்.

தமிழர்கள் இரண்டாம்தரப் பிரசைகள். அதனால் அவர்களை எதுவும் செய்யலாம்; இதுவும் செய்யலாம்; இன்னமும் செய்யலாம் என்ற அடிமை நிலையில் அரசபடைகள் நடத்துகின்றன.

சந்திரிகா தமிழர்களுக்கு வழங்கும் சமநீதியும் சமத்துவமும் இது தான்!

# கொழும்பு துறைமுகத்தை தாக்கிய படகுகள் எங்கிருந்து வந்தன?

## கடற்படையினர் – பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஏப். 18

கடந்த வெள்ளியன்று கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் படகுகள் எங்கிருந்து புறப்பட்டு பாதுகாப்பு பிரதேசமான துறைமுக கடல் பிராந்தியத்துக்குள் நுழைந்தன என்பதைக் கண்டறிவதில் கடற்படையினரும் பொலீஸாரும் தனித்தனியே விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவக் கூடிய இடங்களாகக் கருதப்படும் ஹொரந்தளை, வத்தளை, முகத்துவாரம் ஆகிய கடற்கரைப் பிரதேசங்களில் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த மூன்று இடங்களிலும் கடற்கரையோரங்களில் சட்ட விரோதமாக குடிசைகள் அமைத்து தங்கியிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

இந்த குடும்பங்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளன. இந்த குடிசைகள் அனைத்தும் பொலீஸாரால் அழிக்கப்பட்டுள்ளன. கற்களால் கட்டப்பட்ட வீடுகளை பொலீஸார் புல்டோசர் கொண்டு இடித்தனர்.

கரையோரப் பகுதிகளில் தங்கி இருந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்களே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், தேடுதல்களின் போது விடுதலைப் புலிகள் இப்பகுதிகளில் தங்கி இருந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# தாண்டிக்குளம் சிப்பாய் தற்கொலை

கொழும்பு,ஏப்.18

தாண்டிக்குளம் சோதனை முகாமில் கடமையில் இருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் கிரனேட் வெடித்ததால் பலியானார்.

பீரிஸ் என்னும் 27 வயது நிரம்பிய கோப்ரலே பலியானவர் ஆவார்.

கிரனேட் தற்செயலாக வெடித்தா? அல்லது தற்கொலை செய்யும் நோக்கத்துடன் வெடிக்க வைக்கப்பட்டதா? என்பது தெரியவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப்பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ)

# துறைமுக ஊழியர்கள் தகவல் கொடுத்தனரா?

கொழும்பு, ஏப். 18

கொழும்புத் துறைமுகம் மற்றும் அங்கு கப்பல்கள் தரித்து நிற்கும் முறை ஆகியவை பற்றிய மிக முக்கியமான தகவல்கள் துறைமுக ஊழியர்கள் சிலராலேயே விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

துறைமுக ஊழியர்கள் பலர் இவ்வாறு கருதுவதாக ''த ஐலண்ட்'' ஆங்கிலப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

துறைமுகத்துக்குள் சரியான இலக்குகளை நாடி கடற்புலிகள் செல்வதற்கு இந்தத் தகவல்களே உதவியிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-உ)

# 5, 800 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்

கொழும்பு, ஏப். 18

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிலைய மாணவர்களில் 5 ஆயிரத்து 800 பேருக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கின்றன.

1994 ஆம், 1995 ஆம் கல்வியாண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 5 ஆயிரம் பட்டதாரி மாணவர்களும், பல்கலைக்கழகக் கல்லூரிகள் போன்ற உயர்கல்வி நிலையங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 800 மாணவர்களும் இந்த புலமைப்பரிசிலை பெறவிருக்கின்றனர்.

சாதாரண புலமைப் பரிசிலாக மாதமொன்றுக்கு 250 ரூபாவும், சிறப்பு புலமைப் பரிசிலாக ஆயிரத்து 300 ரூபாவும்வழங்கப்படும். (இ-3)

# வலிகாமத்தில் நிலைமை சீரென்றால் பத்திரிகையாளர் தடுக்கப்படுவது ஏன்?

மணிலா,ஏப்.18

இலங்கை இராணுவம், தனது கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமம் பகுதிகளுக்கு, கொழும்பில் இருந்து பத்திரிகையாளர் செல்வதற்கு இன்னும் அனுமதி மறுத்து வருகின்றது.

வலிகாமம் பகுதியில் அரசு நிர்வாகம் சீராக நடைபெறுகின்றது என்றும் —

புனர்வாழ்வுப் பணிகள் தீவிரமாகச் செயற்படுகின்றன என்றும்— இலங்கை அரசு தம்பட்டம் அடிப்பது உண்மையெனில் பத்திரிகையாளர்களுக்கு தடை விதிக்க வேண்டிய காரணம் என்ன?

இராணுவம் நடத்தும் அத்துமீறல்களை வெளி உலகில் இருந்து மறைக்கத்தான் இந்த உத்தியை அரசு மேற்கொள்கிறதா?

மேற்கண்டவாறு கொழும்பு பத்திரிகையாளர் கேள்வி எழுப்புவதாக வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-3)

# 32'பி' புள்ளி நிவாரணம்

சாவகச்சேரி ,ஏப் 18

இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தில் 32'பி' புள்ளிக்கான இருவார விநியோகத்தை எதிர் வரும் சனிக்கிழமை ஆரம்பிக்குமாறு புனர்வாழ்வுப்பிரிவு ப. நோ. கூ. சங்கங்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த நிவாரண விநியோகம் அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்று ப. நோ. கூ. சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. (இ-3)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை வெள்ளிக்கிழமை (19-04-96) காலை 10. 00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரியுள்ளது.

★ கிருஸ்ணர் சிறீதரன் — ''சிறீஸ்வரி பவனம்'', சுழிபுரம் கிழக்கு.

★ சரோஜினிதேவி மாணிக்கராசா — வறத்துப் பளை, பருத்தித்துறை.

★ மேரிறொஸ் இருதயமலர் அகஸ்ரின் ஞானமணி— இல. 194, 1ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

★ சரஸ்வதி முத்தையா — இல. 224/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லம்மா செல்லத்துரை — இல. 630, கண்டி வீதி, அரியாலை.

★ தம்பையா இராசரத்தினம் அல்லது பாலாம்பிகை இராசரத்தினம் அல்லது ஞானாம்பிகை இராசரத்தினம் — ஆச்சிரமத்தடி, கரந்தன்.

★ கனகபூசனம் குழந்தைவேல் — சுன்னாகம் மேற்கு.

★ சுப்பிரமணியம் நவரட்ணம் — சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

★ பொன்னையா செல்வரட்ணம் — கலாநிதி சனசமூக நிலைய ஒழுங்கை, ஏழாலை வடக்கு.

★ குருகுப்பிள்ளை அன்ரனி பொன்ராசா அல்லது குருசுப்பிள்ளை கௌரியேற்பிள்ளை — பற்றிமா வீதி, மாதகல்.

★ காசிப்பிள்ளை முத்துராசா — நாச்சிமார் கோவிலடி, நவாலி வடக்கு.

★ சாந்தி அப்புக்குட்டி — பல்கலைக்கழக வீதி, கொக்குவில் மேற்கு.

★ கனகு குணமணி — இல 93, நாயன்மார் வீதி, நல்லூர்.

★ குகதாசன் அல்லது சிவயோகேஸ்வரி குகநாசன்— இல. 32, சென். ஆன்ஸ் லேன், சுண்டுக்குளி.

★ கார்த்திகேசு நவரெட்ணம் அல்லது நவரெட்ணம் நாகரெத்தினம் — காலையடி தெற்கு, பண்டத்தரிப்பு.

★ பூபதி சுதாகரன் — கல்லாரை, மல்லாகம்.

★ துரைசாமி குணேந்திரன் — இல151, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு.

★ கணபதிப்பிள்ளை மரியதாஸ்—மே/பா கணபதிப்பிள்ளை சின்னத்துரை ... றோட், உடுவில் (புவன கிரி) (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைக் கப்பல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யப் பொருள்கள், ஆயுத தளபாடங்கள் ஆகியவற்றை திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறை துறைமுகத்துக்கு கப்பல் தொடர் அணியாக எடுத்துவரும் சமயம் அந்த அணிகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காக வேண்டியேற்படுகிறது.

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் முல்லைத்திவு, வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதை அடுத்து கடற்படையினர் புதிய வழியை நாடியுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து ஆழக் கடலுக்குச் சென்று, அங்கிருந்து இந்திய கடற்கரையோரமாகப் போய் அந்த வழியாக காங்கேசன் துறையை அடைவதே கடற்படையினரின் தற்போதைய புதிய பாதை எனத் தெரிவிக்கப்படுகின்றது.இந்தப் பாதை ஊடாக செல்லும் தொடர் அணிகளுக்கு ஸ்ரீலங்கா விமானங்களும் வானத்தில் பறந்து பாதுகாப்பு வழங்குகின்றன. அதேசமயம் இந்தியக் கரையோர காவற்படையும் அச்சமயம் அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு பாதுகாப்பு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த — நீண்ட — புதிய பாதையினால் கடற்படை அணி திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறையைச் சென்றடைய 24 மணி நேரத்துக்கு மேல் செல்வதாகவும் —

முன்னர் எட்டு முதல் 10 மணித்தியால நேரத்தில் கடற்படை அணி காங்கேசன் துறையைச் சென்றடைந்ததாகவும்—

இந்த நீண்ட பயணம் காரணமாக வாரத்தில் இருதடவையே கடற்படை தொடர் அணியின் சேவையை நடத்த முடிவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இந்த நீண்டதூர சேவையால் அரசுக்கு பெருமளவில் செலவு ஏற்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கு தேவையான மரக்கறி மற்றும் மாமிச உணவுகள் விமானப்படையினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''வை 8'' சிறிய விமானம் மூலம் தினமும் அனுப்பி வைக்கப்படுவதாகவும்—

தினமும் 15 தடவை இந்த விமான சேவை பலாலிக்கு -ஆழ் கடலுக்கு மேலாக-மேற்கொள்ளப்படுவதாகவும்—

விமானம் பலாலிக்குச் செல்லும் சமயம், விடுதலைப் புலிகள் தரித்து நின்று தாக்குதல் நடத்தக்கூடிய பகுதிகள் எனக் கருதப்படும் கடற்பகுதிகளில் கடற்படைப் படகுகள் ரோந்தில் ஈடுபடுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக்கும் — பலாலிக்கும் இடையில் ஒருவழிப் பயணத்துக்கு சில லட்சம் ரூபா பணத்துக்கு இந்த விமானம் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

கடல், விமான வழிகள் ஊடாக வடக்குக்கு உணவு எடுத்துச்செல்ல அரசாங்கம் பல லட்சக் கணக்கான ரூபாக்களை தினமும் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# வாழைச்சேனைப் பகுதியில் விரைவில் படை நடவடிக்கை

கொழும்பு, ஏப். 18
மட்டக்களப்பு — வாழைச்சேனைப்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள படையினர் முஸ்தீபு செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு — பதுளை வீதியில் உள்ள கிராமங்களில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக மட்டக்களப்பு — வாழைச்சேனை பிரதான வீதியில் போக்குவரத்தை படையினர் தடை செய்துள்ளனர் என்றும்—

செங்கலடிக்கு சமீபமாகவுள்ள இராணுவ முகாம்களில் மேலதிக படையினர் குவிக்கப்படுவதாகவும்—செய்திகள் தெரிவித்தன. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா பாலகிருஷ்ணேஸ்வரன்
(லங்கா சிமெந்து லிமிட்டெட்)

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த பொன்னையா பாலகிருஷ்ணேஸ்வரன் 16 - 4 - 96 இல் காலமானார்.

இவர் தேவசேனாவின் (ஆசிரியை உரும்பிராய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், சாரங்காவின் (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும், செல்லையா பொன்னையா — பாக்கியம் பொன்னையாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் (அதிபர்)— மரகதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மருமகனும், மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ராசமணி ஆகியோரின் பெறாமகனும் கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர்), ரஞ்சிதராணி, விமலினிதேவி (ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும், சிவபாலன், சிவயோகி, மாலதி, உமாபாலன், ஜெயலக்சுமி, குகனேசன், இரத்தினவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சறோஜாதேவி, தபோதநாயகம், நித்தியகீர்த்தி, சுகந்தி ஆகியோரின் சகலனும், தர்ஷிகா, மதீசன், அருண், க. சேயோன் ஆகியோரின் பெரிய தந்தையும், லக்ஷிதா, ஹம்ஷிதா, ஹம்சாயினி, ஸ்ரீஜெயந்தன், தனஞ்சயன், ஸ்ரீகிருஷ்ணன், ஸ்ரீசியாமளன், ஸ்ரீதுவாரகன், சேயோன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-04-1996 இல் உடுப்பிட்டி எள்ளங்குளம் மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. தேவசேனா (மனைவி)

சத்யவாசா,
இமையாணன்,
உடுப்பிட்டி, (41396)

## சண்முகம்பிள்ளை இராசரத்தினம்

வட்டு - கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்டிருந்த சண்முகம்பிள்ளை இராசரத்தினம் (ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்) கொழும்பில் நேற்று (17 - 04 - 96) காலமானார்.

அன்னார் செல்வதேவியின் அன்புக் கணவரும், திருமதி ரஜினா மகேஸ்வரன் (அமெரிக்கா), இ. சிறிகாந்தன் (U.K.), செல்வி இ.உமா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை — வியாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், ச. குலசேகரம்பிள்ளை (Accountant in U.K.), ச. இராசதுரை (ஓய்வு பெற்ற G.B. Ltd. வங்கி ஊழியர்) அன்புச் சகோதரனும், இந்துஜாவின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (18 - 04 - 96) கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
ச. இராசதுரை
(சகோதரன்)

மே/பா. த. இராசலிங்கம்,
அரசாங்க ஆஸ்பத்திரிக்கருகாமையில்,
கண்டி வீதி,
சாவகச்சேரி. (41551)

## குமரையா சிவக்கொழுந்து

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், தற்போது தும்பளை, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்டிருந்த குமரையா சிவக்கொழுந்து (17-04-96) நேற்று பருத்தித்துறையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமரையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற டாக்டர் க. கெங்காதரம்பிள்ளையின் (மருந்துக்கடை சங்கானை) சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-04-96) பிற்பகல் 1 மணிக்கு தும்பளை, பருத்தித்துறையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. திருவம்பலமயம்

தும்பளை,
பருத்தித்துறை. (41550)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 18-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### கொழும்புத் துறைமுகத்தில் வீரகாவியம் படைத்த
# ஒன்பது கடற்கரும் புலிகளுக்கும் மக்கள் உணர்வுபூர்வ அஞ்சலி

வடமராட்சி, ஏப். 18
கொழும்புத் துறைமுகத்திற்குள் ஊடுருவி பெருந்தாக்குதல் நடத்தி வீரசாதனை புரிந்த ஒன்பது கடற்புலிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் எழுச்சி நிகழ்வின் இறுதி நாள் நேற்று இடம்பெற்றது

வடமராட்சிப் பகுதியில் மூன்றாவது நாளாக இடம்பெற்ற நேற்றைய நிகழ்வில், பெரும் எண்ணிக்கையான மக்கள் வீரகாவியம் படைத்த ஒன்பது பேருக்கும் உணர்வு பூர்வமாகத் தமது அஞ்சலிகளையும் மரியாதையையும் செலுத்தினர்.

நேற்றுக் காலை பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்தியில் இடம்பெற்ற வீர வணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து—

கடற்புலிகளின் உருவப் படம் தாங்கிய கப்பல் வடிவிலான ஊர்தி — பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாக மாலையில் நெல்லியடியை வந்தடைந்தது.

மாவீரர்களின் வீடுகளில் இருந்து பவனியாக எடுத்து வரப்பட்ட கடற்புலிகளின் ஊர்தியும் இங்கு வந்து சேர்ந்தது.

வீதியின் இரு மருங்கிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு நின்று அஞ்சலி செலுத்தியதால் ஊர்திகள் மெதுவாகவே நகர்ந்து வந்தன.

நெல்லியடி பஸ் நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் ஒன்பது கடற்கரும் புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு—

மாவீரர்களின் பெற்றோர்களும், போராளிகளும், மக்களும் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து கரவெட்டி வட்டவைப் பொறுப்பாளர் திரு செழியன் தலைமையில் அங்கு நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதன் பின்னர் இரண்டு ஊர்திகளும் கரணவாய் நவிண்டில் ஊடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தைச் சென்றடைந்தன.

அங்கு ஒன்பது கடற் கரும் புலிகளுக்கும் நடுகல் நடப்பட்டது. (15-36-80-173)

# ஓய்வூதியர்கள் பலருக்கும் நேற்றுப் பலத்த ஏமாற்றம்

சாவகச்சேரி, ஏப். 18
வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களில் மிகப் பெரும்பாலானோருக்கு மார்ச் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைக்கவில்லை.

அது குறித்து அவர்கள் பெரும் அதிருப்தியும் கவலையும் வெளியிட்டனர்.

மார்ச் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் மிகவும் பிந்தியே யாழ். செயலகத்துக்குக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அவை தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டதாக ஓய்வூதியக் கிளைக் கணக்காளர் அறிவித்ததைத் தொடர்ந்து. —

ஓய்வூதியர்களில் மிகப் பலரும் 15 முதல் 26 மைல் வரை தாம் இப்போது தங்கியுள்ள வதிவிடங்களிலிருந்து இடம்பெயர்ந்த தபாலகங்களுக்குச் சென்றனர்.

ஆனால் வவுச்சர் வந்த சேரவில்லை என்று பல தபாலகங்கள் கையை விரித்தன. சில தபாலகங்கள் உரிய நேரத்திற்குத் திறக்கப்படவில்லை.

ஓய்வூதிய வவுச்சர்களை முன்னரைப் போல வங்கிடம் ஒப்படைத்தால் தமக்கு இரட்டை அலைச்சலும், ஏமாற்றமும் கிடைக்காது என்று ஓய்வூதியர்கள் சுட்டிக் காட்டினர். (அ)

### கையொப்ப..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிலைப்பாட்டை தெரிவிப்பது போன்ற நோக்கங்களுக்கான கருத்துக் கணிப்பாக இப்போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்போராட்டம் சம்பந்தமான செயன்முறைகள் வருமாறு:-

★ ஐ. நா. செயலாளர், ஸ்ரீலங்கா ஜனாதிபதி, விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோருக்கு சமர்ப்பிக்கப் படவிருக்கும் இந்த மகஜரில் தனித் தனியாக மூன்று பிரதிகளில் கையொப்பம் இட வேண்டும்.

★ ஒவ்வொரு குடும்பத்திலும் 18 வயதுக்கு குறையாத சகலரும் ஒப்பமிடலாம்.

★ சுயவிருப்பத்துக்கு மாறாக எவரும் ஒப்பமிட வேண்டியதில்லை.

★ ''சொந்த முகவரி'' என்ற இடத்தில் நிரந்தர முகவரியை எழுதவேண்டும்.

★ இந்தப் பணியில் பயிற்சி அளிக்கப்பட்ட தொண்டர்கள் ஈடுபடுவர்.

★ ஒருவர் ஒரு தடவையே ஒப்பமிடல்வேண்டும்.

★ வலய ரீதியாக, கிராம சேவை அலுவலர் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள இணைப்பாளர்கள் இந்தப் பணிக்கு பொறுப்பாக இருப்பர்.

★ இன்று முதல் 22 ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தப் பணி நடக்கும்.

★ ஒப்பம் இட முடியாதவர்கள் பெருவிரல் அடையாளம் இடலாம்.

கையெழுத்துப்பெறும் பணி இன்று காலை 9 மணிக்கு ஐந்து இடங்களில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

கைதடி ப. நோ. கூ. சங்க தலைமைச் செயலகம், மட்டுவில் சோமஸ்கந்த வாசிகசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் இந் நிகழ்வுகள் இடம்பெறும்.

பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, மருதங்கேணி ஆகிய இடங்களிலும் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளில் உள்ள பொது அமைப்புக்களை அந் நிகழ்ச்சிக்கு சமூகமளிக்குமாறு [illegible] ஒன்றியம் கேட்டுள்ளது. (உ-3)

### கடற்றொழிலாளர்..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும்—

வெண் ஆடை அணிந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை வடமராட்சிப் பிரதேசத்தில் இன்று நடத்துவதற்கு வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன.

பேரணி மாலை 4 மணிக்கு மூன்று இடங்களில் இருந்து ஆரம்பமாகும்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் புலோலி உபயகதிர்காமம் கோவிலடியிலும்—

வடமராட்சி — தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் துன்னாலை இந்திரன் அம்மன் கோவிலடியிலும் —

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் அல்வாய் மாலுச்சந்திப் பிள்ளையார் கோவிலடியிலும் —

ஒன்றுகூடி பேரணியாய் புறப்பட்டு மந்திகைச் சந்தியில் ஒன்றிணைவர்.

அங்கு வைத்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்தின் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படும்.

பின்னர் பேரணி பருத்தித்துறை நோக்கிச் சென்று அங்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிப்பதுடன் நிறைவுறும்.

ஐ. நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ராஸ் காலி மற்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட மகஜர்களே கையளிக்கப்படவிருக்கின்றன. (உ-15-80- 173)

### இன்று...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறித்த செய்தியே.

இன்று வலிகாமம் பகுதியில் இருந்த வெளியேறிய இலட்சக்கணக்கான மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் மிகச் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகள் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளவிருக்கும் மிகவும் கொடூரமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படவும், பல்லாயிரம் மக்கள் காயங்களுக்கு உள்ளாகவும் நேரிடும். அதனால் உண்டாகும் அவலங்கள் மிகவும் கொடூரமாகவே அமையும்.

இதன் காரணமாக வன்னி சென்று பாதுகாப்பாக — தற்காலிகமாக — வாழ்வதற்கு முயற்சிக்கும் மக்களை நாம் ஊக்கிவித்தும், எங்களால் இயன்ற பல உதவிகளை அவர்களுக்கு வழங்கியும் வருகின்றோம். தற்பொழுதும் இராணுவம் மேற்கொள்ள இருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி, அதிகளவான மக்கள் வன்னிக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் இவர்களுக்கான உதவிகளை நாம் வழங்கிவரும் வேளையில், மேலும் பல மக்கள். தங்களின் வசதியீனங்களைத் தெரிவித்து, இலவச போக்குவரத்து சேவையை வழங்கி வசதிகளைச் செய்து தரும்படி கோரியுள்ளனர்.

இதனால் படகில் செல்வதற்கும் மறுகரையில் வன்னி செல்வதற்கும் இலவசப் போக்குவரத்து வசதிகளையும் தற்காலிக தங்குமிட ஒழுங்குகளையும் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இன்றிலிருந்து ஐந்து நாள்களுக்கு இலவச படகு ஒழுங்குகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளோம்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-7)

### தாக்குதல்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளனர் இதனைத் தடுக்க அரசினால் இயலாது போயுள்ளது.

இத்தாக்குதல் எமது பொருளாதாரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

இலங்கைத் துறைமுகம் முக்கியமானதொரு கப்பல்போக்குவரத்து நிலையமாக இருக்கிறது. இனிமேல் கப்பல்காரர்கள் இத்துறைமுகத்தை தவிர்த்து செல்வர்.

இதனால் நேரடி ஏற்றுமதிக்கு பாதிப்பு தோன்றும். கப்பல் கட்டணம் உயரும்.

அரசு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். முழு உண்மைகளையும் வெளியிட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org